4.10.24. இந்து தமிழ்த் திசை



↑ அவினாசிலிங்கம் உயர்கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற கலை விழாவில் நடனமாடிய வெளிமாநில மாணவிகள்.

படம்: ஜெ.மனோகரன்.

# அவினாசிலிங்கம் கல்வி நிறுவனத்தில் கலை விழா

● கோவை

கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனத்தில் கலை விழா நடைபெற்றது. இதில் வேந்தர் தி.சு.க.மீனாட்சிசுந்தரம் பேசும்போது, "மாணவிகளிடையே சுயமுன்னேற்றம், ஊக்கம், தைரியம் அனைத்தும் வளர்வதற்காக ஒவ்வொரு வருடமும் கலை விழா நடைபெறுகிறது. கலை மற்றும் கலாச்சாரம் மாணவிகளின் பன்முகப் படைப்பாற்றல், ஆளுமைத்திறனை வெளிப்படுத்துகிறது" என்றார்.

அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை உதவி நிர்வாக அறங்காவலர் கௌரி ராமகிருஷ்ணன், சிறுமுகை காரப்பன் சில்க்ஸ் முதன்மை நெசவாளரும், நிறுவனருமான காரப்பன், ரேன்கோ மில்ஸ் நிறுவனர் அன்கிதா தினேஷ் ஆகியோர் பேசினர். கலை விழாவை முன்னிட்டு மலர், உணவு, கொலு, ஆடை கண்காட்சி நடைபெற்றது. பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகள் 212 பேருக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பேராசிரியர் சுமதி நன்றி கூறினார்.